பொருளடக்கம்

தொகுதி / கருப்பொருள்	தலைப்புகள்		பக்கம்
1 பொறுப்பற்ற செயல்	பயிற்சி 1	நான் அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் விளைந்த விபரீதம்	1 - 5
	பயிற்சி 2	பொறுப்பற்ற செயல் - நடைபாதை	6 - 10
2 பொருளைத் தொலைத்தல்	பயிற்சி 3	நான் ஒரு பொருளைத் தொலைத்த சம்பவம்	11 - 15
	பயிற்சி 4	பொருளைத் தொலைத்தல் - பள்ளி	16 - 20
3 திருட்டு	பயிற்சி 5	நான் கண்ட திருட்டு	21 - 25
	பயிற்சி 6	திருட்டு - வீட்டின் கீழ்த்தளம்	26 - 30
4 பிடிவாதம்	பயிற்சி 7	என் பிடிவாதச் செயலால் ஏற்பட்ட பாதிப்பு	31 - 35
	பயிற்சி 8	பிடிவாதம் - பேரங்காடி	36 - 40
5 ஆபத்தான செயல்	பயிற்சி 9	நீச்சல் குளத்தில் உன் நண்பனுக்கு ஏற்பட்ட ஆபத்தான செயல்	41 - 45
	பயிற்சி 10	ஆபத்தான செயல் - நீச்சல் குளம்	46 - 50
6 விளையாட்டில் விபரீதம்	பயிற்சி 11	உனக்கு ஏற்பட்ட ஒரு விபரீதம்	51 - 55
	பயிற்சி 12	விளையாட்டில் விபரீதம் - விளையாட்டுத் திடல்	56 - 60
7 சோர்வு	பயிற்சி 13	தூக்கத்தால் நான் இழந்தது	61 - 65
	பயிற்சி 14	சோர்வு - பேருந்து	66 - 70
8 அசட்டுத் துணிச்சல்	பயிற்சி 15	என் அசட்டுத் துணிச்சலால் ஏற்பட்ட ஆபத்து	71 - 75
	பயிற்சி 16	அசட்டுத் துணிச்சல் - கால்வாய்	76 - 80
9 சாலை விபத்து	பயிற்சி 17	எனக்கு ஏற்பட்ட சாலை விபத்து	81 - 85
	பயிற்சி 18	சாலை விபத்து - சாலை	86 - 90
10 உடல் நலக் குறைவு	பயிற்சி 19	பள்ளியில் உனக்கு ஏற்பட்ட உடல் நலக் குறைவு	91 - 95
	பயிற்சி 20	உடல் நலக் குறைவு - பள்ளி நோயாளி ஓய்வறை	96 - 100
11 விடாமுயற்சி	பயிற்சி 21	விடாமுயற்சியால் நான் பெற்ற வெற்றி	101 - 105
	பயிற்சி 22	விடாமுயற்சி - உடற்பயிற்சிக்கூடம்	106 - 110
12 எதிர்பாராத சம்பவம்	பயிற்சி 23	கேளிக்கைச் சந்தையில் நிகழ்ந்த எதிர்பாராத சம்பவம்	111 - 115
	பயிற்சி 24	எதிர்பாராத சம்பவம் - கேளிக்கைச் சந்தை	116 - 120
13	**விடைத்தாள்கள் (பயிற்சி 1 - 24)**		121 - 165

தொகுதி 1

பயிற்சி வினா 1

பின்வரும் தலைப்பைக் கொண்டு **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதவிக் குறிப்புகளையும் மனவரைபடத்தையும் இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

நான் அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் விளைந்த விபரீதம்

- நீ எறிந்த பொருள் என்ன?
- அதை எங்கிருந்து நீ வீசி எறிந்தாய்?
- நீ எறிந்த பொருளால் விளைந்த விபரீதம் என்ன?
- விபரீதம் உன்னை எவ்வாறு பாதித்தது?

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS JUMP GRADES ACHIEVE BIG

உதவிக் குறிப்புகள்

- சினம் என்னை சிந்திக்க விடவில்லை
- ஆத்திரத்தில் அறிவிழந்து வீசி எறிந்தேன்
- பல மாடிக் கட்டடம்
- படுக்கை அறை சாளரம் வழியாக
- அதிக விசையுடன் கீழ் நோக்கி பாய்ந்தது
- கண்ணாடிப் புட்டி காலைக் குத்திக் கிழித்தது
- இழைத்த குற்றத்திற்குத் தண்டனை
- வீம்பால் விளைந்த விபத்து

மனவரைபடம்

முன்னுரை
என்ன பொருள்?
- கண்ணாடிப் புட்டி

முன்னுரை
எப்போது?
- மதியம்
- பள்ளி முடிந்து

முன்னுரை
எங்கே?
- வீட்டில்

நான் அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் விளைந்த விபரீதம்

பொருளுரை
எங்கிருந்து எறிந்தாய்?
- வீட்டின் சாளரம் வாயிலாக

பொருளுரை
என்ன விபரீதம்?
- சினத்தில் கனமான கண்ணாடிப் புட்டியை வீசி
- தாயார் கண்டித்தல்
- கீழ்த்தளத்தில் அலறல் சத்தம்
- பேரொலி
- படபடப்புடன் கீழே செல்லுதல்

பொருளுரை
விபரீதத்தால் விளைந்த பாதிப்பு?
- சுயநினைவற்ற மங்கை
- தலையில் பலத்த காயம்
- குற்ற உணர்ச்சி
- காவல் அதிகாரி - கண்டித்தல்
- சிறுவன் என்பதால் மன்னிப்பு
- எச்சரித்தல்

முடிவுரை
கற்றுக்கொண்ட பாடம் / நீதி / கூற விரும்பும் கருத்து?
- தவற்றை எண்ணி வருந்துதல்
- ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
- சினத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்
- திருந்துதல்

மனவரைப்படத்தை அடிப்படையாகக் கொண்டு, **கோடிட்ட இடங்களில் பொருளுரை பகுதியை எழுதி** 100 சொற்களுக்குக் குறையாமல் இந்தக் கட்டுரையை **நிறைவு செய்க.**

நான் அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் விளைந்த விபரீதம்

வார இறுதிநாளின் இனிய காலைப் பொழுதில் பள்ளியின் திட்டப்பணிக்காக இனிய சொற்களைத் திரட்ட வேண்டுமென்பதால் நாளிதழை மும்முரமாகப் புரட்டினேன். அத்தருவாயில் 'அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் ஏற்பட்ட விபத்து' என்ற தலைப்புச் செய்தி பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அதனைக் கண்ணுற்ற எனது புன்னகைப் பூத்த முகம் வாடிப்போன அனிச்சம் பூப்போல மாறியது. எனது எண்ண அலைகள் பின்னோக்கிச் சென்றன. சில மாதங்களுக்கு முன்.....

பள்ளி நிறைவடைந்து விட்டதைக் குறிக்கும் மணி பள்ளி முழுவதுமாக ரீங்காரமிட்டது. மாணவர்கள் கூண்டிலிருந்து விடுதலை பெற்ற பறவைகள் போல தங்களின் மனைக்குத் துரிதமாகப் புறப்பட்டனர். நானும் எனது உற்ற தோழன் மாறனும் காற்றைக் கிழித்துக்கொண்டு எங்களது மனைகளுக்கு விரைந்தோம். மேலும், எங்களது இல்லங்கள் அருகாமையிலேயே இருப்பதால் நாங்கள் அனுதினமும் ஒன்று சேர்ந்துதான் இல்லத்திற்குச் செல்வோம்.

WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

எனது தவறான செயலை எண்ணி நான் வருந்தினேன். அப்பொழுதுதான் ஆசிரியர் போதித்த திருக்குறள் நினைவிற்கு வந்தது.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

என்ற தெய்வப் புலவரின் வாக்கின்படி நான் சினமடைந்ததால், அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இத்தகைய சம்பவத்தில் சிக்கினேன். எப்பொழுதும் கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அக்கோபம் நம்மையே கொன்றுவிடும் என்று இச்சம்பவம் எனக்குத் தெளிவாக உணர்த்தியது. எனவே, எப்போதும் பொறுமையாக இருப்பது உத்தமம் என்று நான் உறுதிமொழி எடுத்துக்கொண்டேன்.

<u>பயிற்சி வினா 2</u>

இடம்: நடைபாதை **கருப்பொருள்:** பொறுப்பற்ற செயல்

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, **<u>100 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் மனவரைப்படத்தையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

புதிய பூந்தொட்டிகள்	நடைபாதையில்
தவறுதலாக கீழே	பெண்மணியின் தலையில்
இரத்தம் வழிந்தது	கூட்டத்தை அப்புறப்படுத்தினர்
சட்டப்படி குற்றம்	அபராதத் தொகை

மனவரைபடம்

பொறுப்பற்ற செயல்

முன்னுரை
என்ன பொருள்?

முன்னுரை
எப்போது?

முன்னுரை
எங்கே?

பொருளுரை
என்ன விபரீதம்?

பொருளுரை
எங்கிருந்து வீசப்பட்டது?

பொருளுரை
விபரீதத்தால் விளைந்த பாதிப்பு?

முடிவுரை
கற்றுக்கொண்ட பாடம் / நீதி / கூற விரும்பும் கருத்து?

சிகரம் P6 தமிழ்க் கட்டுரை விடைத்தாள்

தொகுதி 1 - பயிற்சி வினா 1

நான் அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் விளைந்த விபரீதம்

வார இறுதிநாளின் இனிய காலைப் பொழுதில் பள்ளியின் திட்டப்பணிக்காக இனிய சொற்களைத் திரட்ட வேண்டுமென்பதால் நாளிதழை மும்முரமாகப் புரட்டினேன். **அத்தருவாயில்** 'அடுக்குமாடியிலிருந்து எறிந்த பொருளால் ஏற்பட்ட விபத்து' என்ற தலைப்புச் செய்தி பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அதனைக் கண்ணுற்ற எனது புன்னகைப் பூத்த முகம் வாடிப்போன அனிச்சம் பூப்போல மாறியது. எனது எண்ண அலைகள் பின்னோக்கிச் சென்றன. சில மாதங்களுக்கு முன்.....

பள்ளி நிறைவடைந்து விட்டதைக் குறிக்கும் மணி பள்ளி முழுவதுமாக ரீங்காரமிட்டது. மாணவர்கள் **கூண்டி**லிருந்து விடுதலை பெற்ற பறவைகள் போல தங்களின் மனைக்குத் **துரிதமாகப்** புறப்பட்டனர். நானும் எனது உற்ற தோழன் மாறனும் காற்றைக் கிழித்துக்கொண்டு எங்களது **மனை**களுக்கு விரைந்தோம். மேலும், எங்களது இல்லங்கள் அருகாமையிலேயே இருப்பதால் நாங்கள் **அனுதினமும்** ஒன்று சேர்ந்துதான் இல்லத்திற்குச் செல்வோம்.

இல்லத்தை வந்தடைந்ததும் "பாலு, இன்றைக்கு ஏன் இவ்வளவு குதூகலம்?" என்று என் பெற்றோர் வினவினார். "இன்று தேர்வுகளின் முடிவுகளை ஆசிரியர் கொடுத்து விட்டார் அம்மா. அதில் நான் சிறப்புத் தேர்ச்சி அடைந்து விட்டேன்" என்று பூரிப்புடன் பதிலளித்தேன். அதைக் கூறும்போது பெருமகிழ்வு என் இதயத்தில் குடிகொண்டது. ஆனால்,

"**அகத்தின் அழகு முகத்தில்** தெரியும்"

என்பது போல தாயின் முகத்தில் மகிழ்ச்சி இல்லாதது அவரின் முகபாவம் காட்டிக் கொடுத்தது.

அம்மாவின் முகத்தில் சந்தோஷத்தைக் காணாத பாலு, குழப்பத்தில் இருந்தான். அம்மா தான் கேட்ட புதிய பேனாவை இன்னும் வாங்கவில்லை என்பதை அறிந்தபோது அவனுக்குக் கடுங்கோபம் வந்தது. சீற்றத்தினால் நான் பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டே, "என்ன, எனக்கு மிகவும் பிடித்த பேனாவை வாங்கவில்லையா? நான் முதலிலேயே சொன்னேன் அல்லவா, பேனாவை வாங்கி வையுங்கள், உறுதியாகச் சிறப்புத் தேர்ச்சி அடைவேன் என்று!" என நான் **சீற்றத்துடன்** கத்தினேன். ஆத்திரத்தில் ஒரு கனமான கண்ணாடிப் புட்டியை எடுத்தேன். "பாலு!" என்று அம்மா தொண்டைக் கிழியக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும்போதே, அதைப் பொருட்படுத்தாமல் நான் கண்ணாடிப் **புட்டியை** வேகத்துடன் எறிந்தேன்.

நான் அசுர வேகத்தில் எறிந்த புட்டி **சாளரம்** வாயிலாக வெளியேறியது. கீழ்த்தளத்தில் "ஐயோ!" என்ற பேரொலி கேட்டது. திகைப்படைந்த அம்மா வாய் பிளந்து உறைந்துபோய் நின்றார். அவரது விழிகள் அகல விரிந்தன. பீதி என்னை மெது மெதுவாய் கௌவ என் இதயம் பதைபதைத்தது. அம்மா சிங்கம் போல கர்ஜித்தார். "ஏன் பாலா இப்படிச் செய்தாய்? உனது ஆத்திரத்தினால் புத்தியை இழந்து செயல்பட்டாய் அல்லவா?" என்று அம்மா என்னைக் கடிந்துக் கொண்டிருக்கும் போதே

"கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு"

என்ற பாடல் வரி என் காதுகளில் இசைத்துக் கொண்டிருப்பது போல உணர்ந்தேன். கோபத்தில் என்ன காரியம் செய்துவிட்டேன்! வெட்கத்தில் தலைக் கவிழ்ந்து அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டேன். அவர், "சரி வா, கீழே போகலாம். யாருக்கும் ஒரு ஆபத்தும் வரக்கூடாது கடவுளே" என்று படபடப்புடன் கூறினார். நாங்கள் இருவரும் நொடிப்பொழுதில் அடுக்குமாடிக் கீழ்த்தளத்திற்கு விரைந்தோம்.

அடுக்குமாடி கீழ்த்தளத்தை அடைந்தவுடன் அங்கே சுயநினைவற்ற ஒரு மங்கையை மருத்துவ வண்டிக்குள் எடுத்துச் செல்வதைக் கண்ணுற்றோம். குற்ற உணர்ச்சி எனது இதயத்தை வருடியது. அப்போது ஒரு காவல் அதிகாரி என்னை நோக்கி "கண்ணாடிப் புட்டி உங்கள் வீட்டிலிருந்துதான் எறியப்பட்டது. அவ்வாறு பொருள்களை எறிவது சட்டப்படி குற்றம். ஆனால், நீ சிறுவனாக இருப்பதால் உனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறேன். மறுபடியும் இப்படிச் செய்தால் உன் பெற்றோர்கள் **அபராதம்** கட்ட நேரிடும்" என்று எச்சரித்தார். அவரிடம் மன்னிப்பு கூறியதும் நானும் அம்மாவும் இல்லத்திற்குப் புறப்பட்டோம்.

எனது தவறான செயலை எண்ணி நான் வருந்தினேன். அப்பொழுதுதான் ஆசிரியர் போதித்த திருக்குறள் நினைவிற்கு வந்தது.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

என்ற தெய்வப் புலவரின் வாக்கின்படி நான் சினமடைந்ததால், அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இத்தகைய சம்பவத்தில் சிக்கினேன். எப்பொழுதும் கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அக்கோபம் நம்மையே கொன்றுவிடும் என்று இச்சம்பவம் எனக்குத் தெளிவாக உணர்த்தியது. எனவே, எப்போதும் பொறுமையாக இருப்பது உத்தமம் என்று நான் உறுதிமொழி எடுத்துக்கொண்டேன்.

அருஞ்சொற்பொருள்

1. **அத்தருவாயில்** - அந்த நேரத்தில் (at the time)
2. **துரிதமாக** - வேகமாக (fast)
3. **மனை** - வீடு (house)
4. **அனுதினமும்** - அன்றாடம் (daily)
5. **சீற்றத்துடன்** - கோபத்துடன் (with anger)
6. **புட்டியை** - போத்தலை (bottle)
7. **சாளரம்** - சன்னல் (window)
8. **அபராதம்** - தண்டனைக்குரிய கட்டணம் (fine)

தொகுதி 1 - பயிற்சி வினா 2

பொறுப்பற்ற செயல்

காலை பொழுது இனிமையாகப் **புலர்ந்தது**. கண்ணனின் தந்தை பம்பரமாய் சுழன்று வேலை செய்தார். செடி வளர்ப்புப் பண்ணையில் **மலிவு** விலை விற்பனையில் வாங்கி வந்த புதிய பூந்தொட்டிகளை நடைபாதையில் அழகாக எடுத்துவைத்தார். அவருக்குத் தோட்டவேலை என்றால் **கொள்ளை ஆசை**. கண்ணன் அவருக்கு உதவி செய்தான். அப்போது எதிர்பாராத வண்ணம் நடைபாதை கம்பியில் அவர் **மாட்டிய** ஒரு பூந்தொட்டி கைத்தவறி கீழே விழுந்தது.

பத்தாவது மாடியிலிருந்து அசுர வேகத்தில் கீழ்நோக்கிச் சென்ற பூந்தொட்டி கீழே நடந்து சென்று கொண்டிருந்த ஒரு **மாதுவின்** தலையில் மோதி விழுந்தது. "ஐயோ!" என்று காதைப் பிளக்கும் வண்ணம் அலறிய அந்த மாது அடியற்ற மரம் போல மண்ணில் சாய்ந்தார். மாடியிலிருந்து எட்டிப்பார்த்த கண்ணனுக்கும் அவன் தந்தைக்கும் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

விழுந்தடித்துக்கொண்டு இருவரும் கீழ்த்தளத்திற்கு ஓடினார்கள். அடிபட்ட மாதுவின் தலையிலிருந்து **குருதி** ஆறாய் பெருக்கெடுத்து வழிந்தது. அதைக்கண்ட இருவர் நெஞ்சமும் பதற்றத்தில் "படக்! படக்!" என்று தாளம் போட்டது. சற்றும் தாமதிக்காமல் கண்ணனின் தந்தை தனது கைத்தொலைபேசியிலிருந்து அவசர மருத்துவ **ஊர்தியை** அழைத்தார்.

கண் இமைக்கும் நொடிக்குள் அவசர மருத்துவ வண்டியும் காவல்துறையும் சம்பவ இடத்தை வந்தடைந்தன. முதலுதவி தாதியர்கள் காயம்பட்ட பெண்மணிக்கு விரைந்து முதலுதவி அளித்தார்கள். காவல் அதிகாரிகள் திரளாகக் கூடி வேடிக்கை பார்த்த மக்களைக் கலைந்து

போகுமாறு பணிவோடு கேட்டுக்கொண்டார்கள். கூட்டத்தில் இருந்த சில **துஷ்டர்கள்** தங்கள் கைத்தொலைபேசியால் அடிபட்ட பெண்மணியைப் படம் பிடித்தார்கள்.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்"

உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, **உபத்திரவம்** செய்யாதீர்கள் என்று காவல் அதிகாரிகள் அந்த துஷ்டர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். முதலுதவி அளித்த தாதியர்கள் அந்த பெண்மணியின் உயிருக்கு ஆபத்தில்லை என்று சொன்ன பிறகுதான் கண்ணனுக்கும் அவன் தந்தைக்கும் போன உயிர் திரும்பியது.

கண்ணனின் தந்தையை **அணுகிய** காவல் அதிகாரிகள் "உயரமான இடத்திலிருந்து பொருள்களை வீசுவது சட்டப்படி குற்றம் என்று உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டு கடிந்துகொண்டனர். பிறகு கண்ணனின் தந்தைக்கு ஒரு பெரும் தொகையை அபராதமாக விதித்தனர்.

"ஆய்ந்து பாராதான் காரியந் தான் சாந்துயரந் தரும்"

ஒரு செயலை செய்யும் முன் அதை நன்கு ஆராய்ந்த பின் பொறுப்போடு தொடங்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் துவங்கினால் அது மிகத்துயரத்தை கொடுத்துவிடும் என்பதை கண்ணனின் தந்தை உணர்ந்தார். இந்தச் சம்பவம் கண்ணனுக்கும் ஒரு பாடமாக அமைந்தது.

<u>அருஞ்சொற்பொருள்</u>

1. **புலர்ந்தது** - விடிந்தது (lighten, sunrise)
2. **மலிவு** - குறைந்த விலை (low priced)
3. **கொள்ளை ஆசை** - அதிக ஆசை (desire)
4. **மாட்டிய** - தொங்கவிட்ட (hanged)
5. **மாதுவின்** - பெண்மணியின் (lady)
6. **குருதி** - இரத்தம் (blood)
7. **ஊர்தியை** - வண்டியை (van)
8. **துஷ்டர்கள்** - கெடுதல் செய்பவர்கள் (bad people)
9. **உபத்திரவம்** - தொல்லை (harm)
10. **அணுகிய** - நெருங்கிய (approached)